Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR
Case No CC.NO. 264/2025, Cr.No.83/2025, Kandili PS
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.6, Page.No.

| | |
|---|---|
| **பெயர்** | முரளி |
| **வயது** | 25 |
| **தந்தை/கணவர் பெயர்** | கோவிந்தராஜ் |
| **கிராமம்** | எளவம்பட்டி |
| **மாவட்டம்** | திருப்பத்தூர் |
| **தொழில்** | தனியார் நிறுவன ஊழியர். |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 08th day of October 2025.

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>முதல் விசாரணை</u> (எதிரிகள் மனுவின் பேரில் ஆஜரில்லை)**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என்னுடைய அண்ணன் ஆவார். கடந்த 02.04.2025 அன்று நான் ஊருக்கு வந்தேன். அப்போது என் அம்மா மதிய வேலையில் திருப்பதிக்கும் சிவகாமிக்கும் இடையே வாய்த்தகராறு ஏற்பட்டதாக கூறினார். பின்னர் இரவு 07.00 மணியளவில் நான் கடைக்கு சென்று விட்டு வரும்போது எதிரி குமரவேல் உன் பெரியப்பா மகன் திருப்பதி எனக்கு வழி விடாமல் தகராறு செய்து வருகிறார் என்று கூறினார். பின்னர் திருப்பதியை நான் அடிக்காமல் வெட்டாமல் விடமாட்டேன் என்று கூறினார். அதற்கு நான் சமாதானம் சொல்லி அனுப்பி வைத்தேன். பின்னர் 07.15 மணியளவில் நான் வீட்டிற்கு சென்றேன். பின்னர் 07.30 மணியளவில் திருப்பதியை எதிரிகள் குமரவேல் மற்றும் வீரபத்திரன் ஆகியோர் வெட்டியதாக எனது அம்மா என்னிடம் கூறினார். பின்னர் நான் சென்று திருப்பதியை பார்த்தபோது அவரின் வீட்டின் வெளியே அவர் புருவத்திலும் இடது கை விரல்களிலும் இரண்டு கால் முட்டியிலும், முதுகிலும் வெட்டுக்காயங்களுடன் படுத்துக்கிடந்தார். பின்னர் விஜயா தகவல்தெரிவித்து 108 ஆம்புலன்ஸஸ் மூலம் திருப்பதியை திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். பின்னர் மேல்சிகிச்சைக்காக கிருஷ்ணகிரிக்கு மருத்துவரகள்

பரிந்துரை செய்தனர். பின்னர் மறுநாள் 07.00 மணியளவில் போலீசார் சம்பவயிடத்திற்கு வந்து அருகிலிருந்தவர்களை விசாரித்து வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தபோது நான் உடனிருந்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள 2−வது கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் போலீசார் சம்பவயிடத்திலிருந்த கத்திகளை அ.சா.2 எடுத்து ஆஜர் செய்ததை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினர். அதற்கு சாட்சியாக நான் கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :−</u>**

எதிரிகள் மனுவின் பேரில் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பு வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்யப்படாததால் முடித்து வைக்கப்பட்டது.

**<u>மறுவிசாரணை :− இல்லை</u>**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR
Date: 2025.10.08 20:18:07 +0530

Judicial Magistrate No.II,
Tirupathur.

Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR
Case No CC.NO. 264/2025, Cr.No.83/2025, Kandili PS
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.5, Page.No.

| | |
|---|---|
| **பெயர்** | விஜயா |
| **வயது** | 29 |
| **தந்தை/கணவர் பெயர்** | சிவக்குமார் |
| **கிராமம்** | எளவம்பட்டி |
| **மாவட்டம்** | திருப்பத்தூர் |
| **தொழில்** | தனியார் நிறுவன ஊழியர். |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 08th day of October 2025.

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>முதல் விசாரணை</u> (எதிரிகள் மனுவின் பேரில் ஆஜரில்லை)**

**நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என்னுடைய அண்ணன் ஆவார். கடந்த 02.04.2025 அன்று பகல் 12.00 மணியளவில் என் அண்ணனுகவும் எதிரி குமரவேலின் மனைவி சிவகாமிக்கும் இடையே எங்கள் நிலத்தில் பிரச்சனை நடந்தது. பின்னர் இரவு 07.30 மணியளவில் என் அண்ணனை எதிரிகள் இருவரும் கத்தியால் வெட்டி விட்டதாக என் அம்மா போன் மூலம் தகவல் தெரிவித்தார். நான் சென்று பார்த்தபோது என் அண்ணனுக்கு இடது புருவம், இடது கை விரல்கிளலும், இரண்டு கால் முட்டிகளிலும், முதுகிலும், தலையிலும்வெட்டுக் காயம் ஏற்பட்டு உடல் முழுவதும் இரத்தமாக இருந்தது. பின்னர் நான் 108 ஆம்புலன்ஸ் மூலம் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் எனது அண்ணனுக்கு முதலுதவி சிகிச்சை அளித்து விட்டு மருத்துவரின் பரிந்துரையின் பேரில் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கும் பின்னர் அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்பதால் தருமபுரி அரசு மருத்துவமனைக்கும் அழைத்துச் சென்றோம். ஆனால் அங்கு அறுவை சிகிச்சை செய்யவில்லை. என் அம்மாவை எதிரிகள் தள்ளியதில் வெளிப்புற காயங்கள் எதுவும் ஏற்படவில்லை. போலீசார் என்னை 03ம் தேதி காலையில் விசாரித்தார்கள்.**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

எதிரிகள் மனுவின் பேரில் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பு வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்யப்படாததால் முடித்து வைக்கப்பட்டது.

**மறுவிசாரணை :- இல்லை**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR
Date: 2025.10.08 20:18:18 +0530

Judicial Magistrate No.II,
Tirupathur.

Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR
Case No CC.NO. 264/2025, Cr.No.83/2025, Kandili PS
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.4, Page.No.

| | |
|---|---|
| **பெயர்** | பரிமளா |
| **வயது** | 45 |
| **தந்தை/கணவர் பெயர்** | காளியப்பன் |
| **கிராமம்** | எளவம்பட்டி |
| **மாவட்டம்** | திருப்பத்தூர் |
| **தொழில்** | விவசாயம். |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 08th day of October 2025.

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>முதல் விசாரணை</u> (எதிரிகள் மனுவின் பேரில் ஆஜரில்லை)**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 என்னுடைய உறவு முறையில் தம்பி ஆவார். அவருக்கும் எதிரிகளுக்கும் இடையே நிலம் சம்பந்தமாக பிரச்சனை உள்ளது. கடந்த 02.04.2025 அன்று மதியம் 12.00 மணியளவில் திருப்பதி என்பவர் அவர்களுடைய நிலத்திலிருந்து கிணற்றின் அருகே வந்து தண்ணீர் எடுப்பது சம்பந்தமாக சிவகாமி என்பவர் சண்டையிட்டுக்கொண்டிருந்ததாக அ.சா.2 என்னிடம் கூறினார். அன்றைய தினம் இரவு 07.30 மணியளவில் சத்தம் கேட்டு நான் அங்கு செல்லும் போது எதிரே எதிரிகள் குமரவேல் மற்றும் வீரபத்திரன் ஆகியோர் வந்தனர். அங்கு சென்று பார்த்தபோது இருட்டாக இருந்தது. திருப்பதி வெட்டுக்காயத்துடன் அவரது வீட்டு வாசலில் இருந்தார். அவருக்கு இடது கை விரலிலும், முதுகிலும், புருவத்திலும், இரண்டு கால் முட்டிகளிலும் வெட்டுக்காயம் இருந்தது. பின்னர் அவரை விஜயா என்பவர் போன் மூலம் தகவல் தெரிவித்து 108 ஆம்புலன்ஸ் மூலம் திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>**

எதிரிகள் மனுவின் பேரில் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பு வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்யப்படாததால் முடித்து வைக்கப்பட்டது.

**<u>மறுவிசாரணை :- இல்லை</u>**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

JUDICIAL MAGISTRATE NO.II

KOVENDHAN S

Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR
Date: 2025.10.08 20:18:31 +0530

Judicial Magistrate No.II,
Tirupathur.

Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR
Case No CC.NO. 264/2025, Cr.No.83/2025, Kandili PS
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.3, Page.No.

| | |
|---|---|
| **பெயர்** | மல்லிகா |
| **வயது** | 26 |
| **தந்தை/கணவர் பெயர்** | திருப்பதி |
| **கிராமம்** | எளவம்பட்டி |
| **மாவட்டம்** | திருப்பத்தூர் |
| **தொழில்** | இல்லத்தரசி. |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 08th day of October 2025.

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>முதல் விசாரணை</u> (எதிரிகள் மனுவின் பேரில் ஆஜரில்லை)**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக உள்ளேன். அ.சா.1 என்னுடைய மச்சினன் ஆவார். அவர்களுக்கும் எதிரிகளுக்கும் இடையே நிலம் சம்பந்தமாக பிரச்சனை உள்ளது. கடந்த 02.04.2025 அன்று மதியம் 12.00 மணியளவில் நான் எங்களுடைய கிணற்றில் தண்ணீர் எடுப்பதற்காக சென்ற போது திருப்பதி என்பவர் அவர்களுடைய நிலத்திலிருந்து கிணற்றின் அருகே வந்து தண்ணீர் எடுப்பது சம்பந்தமாக சிவகாமி என்பவர் சண்டையிட்டுக்கொண்டிருந்தனர். சிவகாமியின் மாமியார் வளர்மதி என்னை நீ தலையிட வேண்டாம் என்று என்னிடம் கூறினார். பின்னர் நான் வந்து விட்டேன். அன்றைய தினம் இரவு 07.00 – 07.30 மணியளவில் சிவக்குமார் எனக்கு போன் மூலம் எனது மனைவி விஜயா அழுதுக்கொண்டிருப்பதாகவும் என்ன என்று சென்று பார்க்குமாறும் கூறினார். நான் சென்று பார்த்தபோது திருப்பதி உடல் முழுவதும் இரத்த வெள்ளத்தில் 108 ஆம்புலன்ஸ்க்காக வீட்டின் வெளியே இருந்தார். அவரை எதிரிகள் வீரபத்திரன் மற்றும் குமரவேல் கத்தியால் தாக்கியதாக அ.சா.2 எனக்கு கூறினார். பின்னர் அவரை ஆம்புலன்ஸ் மூலம் திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கும் மேல்சிகிச்சைக்காக கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மருத்துவமனைகளுக்கும் அனுப்பி வைத்தனர். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள்  தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>**

எதிரிகள் மனுவின் பேரில் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பு வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்யப்படாததால் முடித்து வைக்கப்பட்டது.

**<u>மறுவிசாரணை :- இல்லை</u>**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR
Date: 2025.10.08 20:18:46 +0530

Judicial Magistrate No.II,
Tirupathur.

Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR
Case No CC.NO. 264/2025, Cr.No.83/2025, Kandili PS
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.2, Page.No.

| | |
|---|---|
| **பெயர்** | குமுதா |
| **வயது** | 55 |
| **தந்தை/கணவர் பெயர்** | லிங்கண்ணன் |
| **கிராமம்** | எளவம்பட்டி |
| **மாவட்டம்** | திருப்பத்தூர் |
| **தொழில்** | இல்லத்தரசி. |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 08th day of October 2025.

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>முதல் விசாரணை</u> (எதிரிகள் மனுவின் பேரில் ஆஜரில்லை)**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக உள்ளேன். அ.சா.1 என்னுடைய மகன் ஆவார். எங்களுக்கும் எதிரிகளுக்கும் இடையே நிலம் சம்பந்தமாக பிரச்சனை உள்ளது. கடந்த 02.04.2025 அன்று பகல் 12.00 மணியளவில் எளவம்பட்டியிலுள்ள எங்களது நிலத்தில் எனது மகன் நிலத்திற்கு தண்ணீர் பாய்ச்சிக்கொண்டிருந்த போது சிவகாமி என்பவர் தண்ணீரை மடக்கினார். அதனால், எங்களுக்குள் சண்டை ஏற்பட்டு பின்னர், வீட்டிற்கு சென்று விட்டோம். அன்று இரவு சுமார் 07.30 மணியளவில் நான் என் வீட்டிற்கு வெளியே உள்ள தொட்டியில் அருகில் உட்கார்ந்திருந்த போது எதிரிகள் குமரவேல் மற்றும் வீரன் ஆகியோர் அங்கு வந்து என் மகனை கேட்டனர். அப்போது நான் பகாலையில் பேசிக்கொள்ளலாம் என்று கூறியதைபயும் கேட்காமல் 2ம் எதிரி குமரவேல் என் கழுத்தை பிடித்து முறுக்கி என்னை அடித்து கீழே தள்ளிவிட்டு மின்சாரத்தை நிறுத்தினார். பின்னர் வீட்டினுள் இருந்த எனது மகன் திருப்பதியை எதிரிகள் இருவரும் அவர்கள் வைத்திருந்த கத்தியால் இடது கையிலும், முகத்திலும், முதுகிலும், இரண்டு கால் முட்டியிலும் வெட்டியதில் அவருக்கு பலத்த காயம் ஏற்பட்டது. அதை நான் நேரடியாகப் பார்த்தேன். பின்னர் என்னுடைய உறவினர்கள் மற்றும் பக்கத்திலுள்ள

அனைவரும் வருவதைப் பார்த்த எதிரிகள் கத்திகளை போட்டுவிட்டு ஓடிவிட்டனர். பின்னர் காயம் ஏற்பட்ட திருப்பதியை விஜியா போன் மூலம் 108 ஆம்புலன்ஸை வரவழைத்து திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். பின்னர் மேல் சிகிச்சைக்காக தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி அரசு மருத்தவமனைகளுக்கு அழைத்துச் சென்றோம். தற்போதும் எனது மகனுக்கு அவருக்கு ஏற்பட்ட காயத்தினால் உடல்நிலை சரியில்லை. என் வீட்டில் வைத்து போலீசார் விசாரித்த போது வழக்கு சொத்து கத்திகளை நான் தான் போலீசாரிடம் எடுத்து ஆஜர் செய்தேன். என்னிடம் காட்டப்படும் வழக்கு சொத்தான கத்திகள் தான் எதிரிகள் என் மகனை தாக்குவதற்கு பயன்படுத்திய கத்திகள் ஆகும். **வழக்கு சொத்தான கத்திகள் இரண்டும் அ.சா.பொ.1 மற்றும் 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>**

எதிரிகள் மனுவின் பேரில் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பு வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்யப்படாததால் முடித்து வைக்கப்பட்டது.

**<u>மறுவிசாரணை :- இல்லை</u>**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR
Date: 2025.10.08 20:18:58 +0530

Judicial Magistrate No.II,
Tirupathur.